# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2019 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 09 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2019.08.09 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

## ஈடு (திருத்தம்)

**(89 ஆம் அத்தியாயமான) ஈடுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 6.00 தபாற் செலவு : ரூபா 15.00

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், (89 ஆம் அத்தியாயமான) ஈடுச் சட்டத்தில் 68அ என்னும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் பிரிவின் சட்டப்பயனானது, 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் நடைமுறைக்கு வருவதன்மேல் அசையும் ஆதனம் தொடர்பில் ஈடுச்சட்டத்தின் பாகம் III இன் ஏற்புடைமையினை வரையறுப்பதற்குமாகும்.

ச. வ.- ஓ. 65/2017

## (89 ஆம் அத்தியாயமான) ஈடுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஈடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*89 ஆம் அத்தியாயத்தில் 68அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

**2.** பின்வரும் புதிய பிரிவானது, (89 ஆம் அத்தியாயமான) ஈடுச் சட்டத்தின் 68 ஆம் பிரிவினை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அச்சட்டவாக்கத்தின் 68அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்.

"*அசையும் ஆதனத்திற்கான பாகம் III இன் ஏற்புடைமை.*

68அ. இச்சட்டத்தின் பாகம் III இன் ஏற்பாடுகள், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அவை ஒவ்வாதனவாகவிராதவரையில் ஏதேனும் அசையும் ஆதனத்திற்கு மட்டும் ஏற்புடையதாதல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.